**மண்முனை தென் எருவில்பற்று பிரதேச சபை 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மண்முனை தென் எருவில்பற்று பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மண்முனை தென் எருவில்பற்று பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சலை உள்ளூராட்சி நிறுவனங்களிற்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்தை வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதாரத் தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுக்ள மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.
- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(i)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிராகரம் கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | சபையின் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ள ரூபா 871,032 உண்மையான களஞ்சிய இருப்புப் பெறுமதி, ரூபா 52,170 சேதனப்பசளை இருப்பின் பெறுமதி மற்றும் ரூபா 802,360 ஆயுர்வேதப் பொருட்களின் கையிருப்பு என்பன சொத்தாக கணக்குகளில் காட்டப்பட்டிருக்கவில்லை. | களஞ்சிய இருப்பு, சேதனப் பசளை இருப்பு மற்றும் ஆயுர்வேதப் பொருட்களின் கையிருப்பு ஆகியவற்றின் பெறுமதிகளை இருப்புக் கணக்கிற்கு கொண்டுவருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஆண்டிறுதி இருப்பு மீதிகள் கணிப்பிடப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் செலுத்தப்பட்ட ரூபா 2,167,547 JCB இயந்திரத்தின் கடன் தவணைப் பணத்தை கடன் கணக்கிற்கு வரவு வைப்பதற்குப் பதிலாக சொச்துக்கள் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டில் செலுத்தப்பட்ட JCB வாகன கடன் தவணைப்பணம் தவறுதலாக பொறி இயந்திரக் கணக்கில் மீளவும் சேர்க்கப்பட்டிருந்ததைத் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்குகளை திருத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் கிழக்கு மாகாண உள்ளூராட்சி திணைக்கள மானியத்தின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 150,000 பெறுமதியான 444 புத்தகங்கள் மற்றும் நன்கொடை மூலம் கிடைத்த ரூபா 100,000 பெறுமதியான 417 புத்தகங்கள் கணக்குகளில் சொத்தாகக் காட்டப்பட்டிருக்கவில்லை. | இதனை சீர்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | புத்தகங்கள் நிதிக்கூற்றுக்களில் சொத்தாக வெளிப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 175,000 பெறுமதியான காற்று அழுத்தி உபகரணமானது நிதிக்கூற்றுக்களில் சொத்தாக காட்டப்பட்டிருக்கவில்லை. | கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 175,000 பெறுமதியான காற்று அழுத்தி உபகரணத்தை நிதிக்கூற்றுக்களில் சொத்தாக காட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்களின் பெறுமதி கணக்குகளில் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (உ) | பதவியினர் கடன் பதிவேட்டின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கடன் மீதியானது ரூபா 11,210,581 ஆகக் காணப்பட்ட போதிலும், நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 12,646,822 எனக் காட்டப்பட்டிருந்தது. | பதவியினர் கடன் பதிவேட்டிற்கும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள தொகைக்குமிடையிலான வித்தியாசங்களை திருத்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்படும். | வேறுபாடுகள் இனங்காணப்பட்டு கணக்குகளுக்கு தேவையான சீராக்கங்கள் செய்யப்பட வேண்டும். |

**1.6.2 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | சிபார்சு |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 31,068,561 பெறுமதியான 18 மீதிகளுடன் தொடர்புடைய நிலையான சொத்துப் பதிவேடு, உரிமையை உறுதிப்படுத்தும் பதிவேடுகள், முற்பணப் பதிவேடு மற்றும் ஏனைய பதிவேடுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | காணி கட்டடங்கள் பொறி, மோட்டார் வாகனங்கள், தளபாடங்கள் போன்ற நிலையான சொத்துக்களின் பெறுமதியை மதிப்பிடுவதற்கும் வாகனங்களின் உரிமையை மாற்றம் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. | சொத்துக்களுக்கான எழுத்து மூலச் சான்றுகளை பெற்றுக் கொள்ளவும் பதிவேடுகளில் பதிவு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.7 இணக்கமின்மைகள்**

**1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிஷக் குடியரசின் நிதிப்பிரமாணம் 571(1) மற்றும் (2) | இரண்டு ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலங்கடந்த ரூபா 592,964 பெறுமதியான 45 வைப்புக்களை உரிய நபர்களுக்கு திருப்பிக் கொடுக்கவோ அல்லது வருமானக் கணக்கிற்கு மாற்றவோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காலங்கடந்த வைப்புக்களை மீளளிப்பதற்கு அல்லது வருமானக் கணக்கிற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வைப்புப் பணங்களை உரிய நபர்களுக்கு திருப்பிச் செலுத்துவதற்கோ அல்லது வருமானமாக மாற்றுவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 8,125,623 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 21,641,604 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

சபையின் அனைத்து வருமானங்களையும் சேகரிக்கும் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான ரூபா 2,504,300 சோலைவரி நிலுவை தொகையினை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைத் தொகை அதிகரித்து காணப்படுவதுடன் தற்போது அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | சோலைவரி நிலுவைகளை அறவிடுவதற்கான நடவடிக்கையை துரிதப்படுத்த வேண்டும். |
| (ஆ) | 1991 தொடக்கம் 2021 வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 2,779,175 கடை வாடகை நிலுவை தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தங்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ள கடை வாடகையினை அறவீடு செய்ய தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கடை வாடகை நிலுவைகளை அறவிடுவதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | 1985 முதல் 2021 ஆம் ஆண்டு வரையான காலத்திற்குரிய ரூபா 18,605,427 சந்தை குத்தகை நிலுவைத் தொகையினை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | சபையில் தீர்மானம் நிறைவேற்றி பதிவழிப்பது தொடர்பாக உள்ளூராட்சி ஆணையாளரின் ஆலோசனை பெறப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. | சந்தைக் குத்தகை நிலுவைகளை அறவிடுவதற்கு அல்லது பொருத்தமான விதத்தில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் கடன் பொறுப்பாக காட்டப்பட்டுள்ள ரூபா 406,537 செலவுக் கடன் வழங்குனர் மற்றும் ரூபா 2,069,410 மின்சாரம் விநியோகக் கடன் தொகைகள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | கடன் பொறுப்பான ரூபா 406,537 செலவுக் கடன் வழங்குனர் மற்றும் ரூபா 2,069,410 மின்சாரம் விநியோகக்கடன் தொகை களை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கடன் நிலுவைகளை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| சபையின் நிர்வாக எல்லைக்குள் நிர்மாணிக்கப்பட்ட பெரிய கல்லாறு திருமண மற்றும் கலாச்சார மண்டபம் தொடர்பில் 2019 ஏப்பிரல் 17 ஆந் திகதிய 597/8 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியில் வெளியிட ப்பட்ட நகர அபிவிருத்தி அதிகரசபை (UDA) ஒழுங்குவிதியின் உபபிரிவு 6(11), (111) இன் பிரகாரம், கட்டிட அனுமதிக்கான ரூபா 1,004,100 தண்டப்பணம் அறவிடப்பட வேண்டிய போதிலும், சபையானது ஒழுங்குவிதியினை மீறி தண்டப் பணமாக ரூபா 64,120 தொகையினை மாத்திரமே அறவிட்டிருந்தது. | எதிர்காலத்தில் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | சட்டத்தின் பிரகாரம் தண்டப் பணங்களை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தின் 2009 யூன் 09ஆந் திகதிய DMA/2009(1) ஆம் இலக்க உள்ளக கணக்காய்வு வழிகாட்டி தொடர்பான சுற்றறிக்கையின் பிரகாரம், மீளாய்வாண்டில் சபையினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டு குழுக் கூட்டங்கள் நடைபெற்றிருக்கவில்லை. | நாட்டில் ஏற்பட்ட கொவிட் பரவல் காரணமாக ஒன்று கூடலினை தவிர்க்க வேண்டிய நிலைமை காரணமாக கூட்டங்கள் கூட்டப்படவில்லை. | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடாத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |